**MCOP NO: 3793/2021** **DATE: 31.07.2025**

எ.ம.சா :1

பெயர் : திரு. என்.கே. நரசிம்மன்

த/பெ : திரு. என்.கே. செல்லப்பா

வயது : 57

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் காரின் பதிவு எண் TN 23 BJ 9669 என்ற வாகனமானது சாலையின் இடது புற ஓரமாக நிறுத்தப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. இறந்துபோன நபர் தனது இருசக்கர வாகனத்தை இடது புற ஓரத்தில் நின்று கொண்டிருந்த காரில் மோதாமல் இருக்க அவர் வலது புறமாக முன்நோக்கி செல்லும்போது காரின் வலது பின்புறம் உரசி செல்லும்போது பின்னால் வந்த ஈச்சர் லாரியானது இருசக்கர வாகனத்தில் மோதி அவருக்கு விபத்து இறந்து விட்டார் என்று முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. மசாஆ 2-ஆன வரைப்படத்தில் TN 23 BJ 9669 என்ற காரின் ஓட்டுநர் எந்த சமிக்கையும் செய்யாமல் சாலையில் வளைவில் நிறுத்தி இருந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் வளைவிற்கு சற்று முன்பாக நிறுத்தப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. மேற்படி காரின் ஓட்டுநர் முறையான சமிக்கை உடன் காரை அந்த இடத்தில் நிறுத்தியிருந்தால் இந்த விபத்து ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தின்போது அந்த சாலை பிரதான சாலை என்றும் அந்த காரானது சாலையின் இடது புற ஓரத்தில் தான் நிறுத்தப்பட்டிருந்தது என்றும் காட்டப்பட்டுள்ளதால் விபத்தானது இருசக்கர வாகனத்தின் அஜாக்கிரதையால் ஏற்பட்டுள்ளது. விபத்தின்போது TN 23 BJ 9669 காரானது எங்கள் நிறுவனத்தில் பேக்கேஜ் பாலிசி செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்றபத்திரிக்கையில் சொல்லப்பட்டுள்ள விசாரணை அதிகாரி மற்றும் அங்கிருந்த கண்ணுற்ற சாட்சிகளை விசாரித்தால் தான் விபத்து எப்படி நடந்தது என்பது தெரிய வரும் என்றால் சரியல்ல. சாலையின் ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த காரின் ஓட்டுநரையோ, லாரியின் ஓட்டுநரையோ விசாரித்தால் தான் விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. நான் விசாரணை அதிகாரியோ, கண்ணுற்ற சாட்சியோ கிடையாது என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்தானது காரின் ஓட்டுநரால் ஏற்பட்டதாலும் விபத்தின்போது காரின் உரிமையாளர் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு

செய்யப்பட்டு அது நிலுவையில் இருந்ததாலும் நாங்கள் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.